# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SPL.SC.No.53/2023**

Prosecution Witness : **LW - 6 / PW - 2**

Defence Witness :

Name : **முருகேசன்** Taluk :

S/o. : Age :

Religion : Work :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **05.02.2025**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் வாளரக்குறிச்சியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். நான் இந்து–வன்னியர் வகுப்பைச் சார்ந்தவர். அ.சா.1 அன்பரசனை தெரியும். அவர் காலனி தெருவைச் சேர்ந்தவர். ஆஜர் எதிரிகளை தெரியும். எங்கள் ஊர்க்காரர்கள்தான். அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. எனக்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததால் இங்கு வந்தேன். போலிசார் என்னை விசாரித்தபோதும் எனக்கு எதுவும் தெரியாது என்று தான் சொன்னேன். அதற்கு போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள்.

மேற்சொன்ன சாட்சியை பிறழ் சாட்சியாக கருத கோரி அரசு தரப்பில் வேண்டுதல் வைத்து அதன்படி அவரை பிறழ் சாட்சியாக கருதி அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிஸ் விசாரணையில் கடந்த 08.07.2023 ஆம் தேதி மாலை 04.00 மணிக்கு நானும் எங்கள் தெருவைச் சேர்ந்த சுப்பரமணியன், பாலமுருகன், ராஜமாணிக்கம், எங்கள் ஊர் பெருமாள் கோவில் அருகே உட்கார்ந்திருந்தார்கள் என்றும் அப்பொழுது எங்களுக்கு கொஞ்சம் தள்ளி எங்கள் ஊரைச் சேர்ந்த கண்ணன், ராஜேஷ்

ஆகியோர்கள் உட்கார்ந்திருந்தார்கள் என்றும் அப்பொழுது எங்கள் ஊர் காலனி தெருவைச் சேர்ந்த அன்பரசன் என்பவர் மாலை 04.00 மணியளவில் அவரது மோட்டார் சைக்கிளில் வந்தார் என்றும் அப்பொழுது அங்கிருந்த கண்ணன், ராஜேஷ் இருவரும் அன்பரசனை கூப்பிட்டு அவர் சாதி பெயரைச் சொல்லி பற தேவடியா மகனே, பற குச்சிக்காரி மகனே என்று திட்டி உங்களுக்கு எங்கள் தெரு வழியா ஊர்வலம் கேட்குதா என்று திட்டினார்கள் என்றும் அதன்பிறகு 11.07.2023 ஆம் தேதி மாலை சுமார் 05.00 மணியளவில் எங்கள் ஊர் பெட்டிக்கடையில் அன்பரசன் தம்பி திருநாவுக்கரசு சிகரெட் வாங்கிவிட்டு தெருவில் நின்று பொத்தாம்பொதுவாக அனைவரையும் மரியாதை இல்லாமல் திட்டினார் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

அ.சா.1 சாதிக்காரர்கள் அவர்கள் வீட்டு விசேசங்கள் எதுவும் இருந்தால் எங்கள் தெரு வழியாக போவார்கள். இதுவரை கோவில் விசேசத்திற்கும் மற்ற விசேசத்திற்கும் அவ்வாறு தான் எங்கள் தெரு வழியாக செல்கிறார்கள். அதில் எந்த பிரச்சனையும் எங்கள் ஊரில் இல்லை.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**<u>IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.</u>**

Case No: **SPL.SC.No.53/2023**

Prosecution Witness : **LW - 7 / PW - 3**

Defence Witness :

Name : சுப்பிரமணியன் Taluk :

S/o. : Age :

Religion : Work :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day <u>05.02.2025</u>

**(எதிரிகள் ஆஜர்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் வாளரக்குறிச்சியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். நான் இந்து–வன்னியர் வகுப்பைச் சார்ந்தவர். அ.சா.1 அன்பரசனை தெரியும். அவர் SC வகுப்பைச் சார்ந்தவர்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்களும் எங்கள் ஊர்க்காரர்கள்தான். அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்றால் எந்த பிரச்சனையும் கிடையாது. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னிடம் விசாரித்தபோதும் பிரச்சனை எதுவும் இல்லை என்றுதான் சொன்னேன்.

<u>மேற்சொன்ன சாட்சியை பிறழ் சாட்சியாக கருத கோரி அரசு தரப்பில் வேண்டுதல் வைத்து அதன்படி அவரை பிறழ் சாட்சியாக கருதி அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.</u>

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிஸ் விசாரணையில் கடந்த 08.07.2023 ஆம் தேதி மாலை 04.00 மணிக்கு நானும் எங்கள் தெருவைச் சேர்ந்த முருகேசன், பாலமுருகன், ராஜமாணிக்கம், எங்கள் ஊர் பெருமாள் கோவில் அருகே உட்கார்ந்திருந்தார்கள் என்றும் அப்பொழுது எங்களுக்கு கொஞ்சம் தள்ளி எங்கள் ஊரைச் சேர்ந்த கண்ணன், ராஜேஷ்

ஆகியோர்கள் உட்கார்ந்திருந்தார்கள் என்றும் அப்பொழுது எங்கள் ஊர் காலனி தெருவைச் சேர்ந்த அன்பரசன் என்பவர் மாலை 04.00 மணியளவில் அவரது மோட்டார் சைக்கிளில் வந்தார் என்றும் அப்பொழுது அங்கிருந்த கண்ணன், ராஜேஷ் இருவரும் அன்பரசனை கூப்பிட்டு அவர் சாதி பெயரைச் சொல்லி பற தேவடியா மகனே, பற குச்சிக்காரி மகனே என்று திட்டி உங்களுக்கு எங்கள் தெரு வழியா ஊர்வலம் கேட்குதா என்று திட்டினார்கள் என்றும் அதன்பிறகு 11.07.2023 ஆம் தேதி மாலை சுமார் 05.00 மணியளவில் எங்கள் ஊர் பெட்டிக்கடையில் அன்பரசன் தம்பி திருநாவுக்கரசு சிகரெட் வாங்கிவிட்டு தெருவில் நின்று பொத்தாம்பொதுவாக அனைவரையும் மரியாதை இல்லாமல் திட்டினார் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>–இல்லை.

<u>மறு விசாரணை</u>–இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.